# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:145 **தேதி**:-25.06.2014

### கசப்பு மாத்திரைகள் ரெடி

அன்பார்ந்த தோழர்களே,

மாற்றம் மற்றும் வளர்ச்சி என்ற கோஷத்தை முன்வைத்து நரேந்திர மோடி தலைமையிலான பாஜக மத்தியில் ஆட்சியை பிடித்தது. பத்தாண்டு காலமாக மத்தியில் ஆட்சி நடத்திய காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் கடைபிடித்த புதிய தாராளமய கொள்கைகளால் வாழ்க்கையை தொலைத்த ஏழை எளிய மக்கள், அவர்கள் மீதிருந்த கோபத்தால் இவர்களுக்கு வாக்காக அளித்தனர். ஆனால் ஆட்சி கட்டிலில் ஏறிய உடனேயே இவர்கள் தங்களின் சுய ரூபத்தை காட்ட துவங்கி உள்ளனர். தொழிற்சங்கங்கள் முதலிலேயே எச்சரிக்கை விடுத்தது போலவே இவர்களும் அதே தவறான புதிய தாராளமய கொள்கைகளையே கடைபிடித்து வருகின்றனர். நாட்டின் பொருளாதாரத்தை சீர்படுத்த சில கசப்பு மாத்திரைகளை மக்கள் சாப்பிட்டே ஆக வேண்டும் என சொல்லும் ஆட்சியாளர்கள், பெரு முதலாளிகளுக்கு அந்த கசப்பு மருந்துகளை தராமல் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு மட்டுமே அதனை தருகின்றனர். இதில் காங்கிரஸ் மற்றும் பாரதீய ஜனதா ஆகியவற்றிற்கு எந்த வேறுபாடும் இல்லை.

ஆட்சிக்கு வந்த ஒரு சில நாட்களிலேயே அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்திற்கு காரணமான டீசல் விலையினை உயர்த்தினர். அடுத்து ரயில் பயணியர் கட்டணத்தை 14.2%ம், சரக்கு ரயில் கட்டணத்தை 6.5%ம் உயர்த்தி உள்ளார்கள். இதுவரை உயர்த்தப்பட்ட கட்டணங்களிலேயே இது தான் அதிகம். இந்த கட்டண உயர்வுகளால் சாதாரண பொதுமக்கள் மிக கடுமையான பாதிப்பிற்கு உள்ளாவார்கள். டீசல் மற்றும் சரக்கு ரயில் கட்டண உயர்வுகளால், அனைத்து பொருட்களின் விலைகளும் உயரும். 2013 ஆம் ஆண்டில் பத்தாண்டு காலத்திற்கு பின் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் இந்தக் கட்டணங்களை 5 முதல் 10 சதவிகிதம் உயர்த்தியது. இதற்கு முன் லல்லு பிரசாத் யாதவ் மற்றும் மம்தா பானர்ஜி ஆகியோர் ரயில்வே துறை அமைச்சர்களாக இருந்த போது ரயில் கட்டணங்களைக் குறைத்தனர். பணவீக்கம் மற்றும் விலைவாசி உயர்வு ஆகியவற்றை காரணம் காட்டி காங்கிரஸ் கட்சியினை குறை கூறி ஆட்சிக்கு வந்த பாரதீய ஜனதா கட்சி பயணிகள் மற்றும் சரக்கு ரயில் கட்டணங்களை உயர்த்தியதின் காரணமாக சாதாரண மக்களின் மீது கடுமையான தாக்குதலை தொடுத்துள்ளது. BSNL ஊழியர் சங்கம் இந்த கட்டண உயர்வுகளை கடுமையாக கண்டிப்பதுடன் இதனை திரும்ப பெற வேண்டுமென கேட்டுக் கொள்கிறது.

**பொதுத் துறைகளின் மீது கடும் தாக்குதல்**:- நரேந்திர மோடி அரசாங்கம் பொதுத்துறைகளை அழிக்க வேக வேகமாக செயல்படுகிறது. SAILநிறுவனத்தின் 5% பங்குகளையும், COAL இந்தியா நிறுவனத்தின் 10% பங்குகளையும், RINL நிறுவனத்தின் 10% பங்குகளையும், NHPC நிறுவனத்தின் 11.6% பங்குகளையும் விற்கும் நடவடிக்கைகளைத் துவங்கி உள்ளது. மேலும் இந்த அரசாங்கம், HINDUSTAN ZINC நிறுவனத்தில் உள்ள தனது 29.54% பங்குகளையும், BALCOவின் 49% பங்குகளையும் விற்கும் பணியினை துவங்கி விட்டது. மோடி அரசாங்கம் SAIL, COAL இந்தியா, RINL, NHPC, HINDUSTAN ZINC ஆகிய ஐந்து பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு விற்பனை மூலம் மட்டும் 69,000 கோடி ரூபாய்களைத் திரட்ட திட்டம் தீட்டியுள்ளது. இது BALCOவின் 49% பங்கு விற்பனையில் வரும் பணத்தை சேர்க்காமல் வரும் தொகை. இது நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களின் மீது தொடுக்கப்பட்டுள்ள கடும் தாக்குதல் என்பதில் சந்தேகம் ஏதும் இல்லை. இதற்கு எதிரான இயக்கங்களில் பங்கேற்போம். அரசின் முயற்சிகளை முறியடிப்போம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(ஸ.செல்லப்பா)

மாநிலச்செயலாளர்.